சாட்சிய வாக்கு மூலம்

(அத்தியாயம் 25 பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஹிதா)

1989 ஆண்டு இயற்றப்பட்ட பட்டியல் சாதியினர் மற்றும் பழங்குடியினர்

( வன்கொடுமை தடுப்பு ) சட்டத்தின் கீழான

வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு நீதிமன்றம் ,

திருவாரூர் - 610 001

தேதி: 12.11.2025

| | | |
|---|---|---|
| சிறப்பு அமர்வு வழக்கு எண். | : | 16/2025 |
| சாட்சியின் வரிசை எண். | : | அ.சா-11 |
| சாட்சியின் பெயர் | : | விமலா |
| கணவர் பெயர் | : | சங்கர் |
| கிராமம் | : | கும்பகோணம் |
| தாலுக்கா | : | கும்பகோணம் |
| தொழில் | : | உதவி பேராசிரியர், அரியலூர் |
| வயது | : | 41 |

2025 ம் ஆண்டு நவம்பர் மாதம் 12 ஆம் நாள் ஆகிய இன்று இந்த நீதிமன்றத்தில் உதவியாளராக பணிபுரியும் திருமதி. ஆர். அன்பரசி அவர்களால் இந்த சாட்சிக்கு 1969 ம் ஆண்டு உறுதிமொழி சட்டத்தின் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு அதன் அடிப்படையில் சாட்சிய வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.

1, 3 முதல் 6 எதிரிகள் ஆஜர். 2 ம் எதிரி ஆஜரில்லை. மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது. அரசு வழக்கறிஞர் மற்றும் எதிரிகள் வழக்கறிஞர் ஆஜராகி உள்ளனர்.

முதல் விசாரணை

1. நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் தற்போது அரியலூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் உதவி பேராசிரியராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்பாக 2018 முதல் 2022 வரை கும்பகோணம்

அரசு மருத்துவமனையில் உதவி அறுவை சிகிச்சை மருத்துவராக பணிபுரிந்து வந்தேன்.

2. அன்றைய தினம் மாலை 5.45 மணிக்கு வேளாக்குடி, மேலத்தெருவை சேர்ந்த ராசு மகன் அ.சா-1 கலியமூர்த்தி சிகிச்சைக்கு வந்தார். அவர் தன்னை மாலை 4.30 மணிக்கு வேளாக்குடி கீழத்தெருவில் அடையாளம் தெரிந்து 6 நபர்கள் மூங்கில் கட்டையால் இடுப்பிலும், முதுகிலும் அடித்ததாக கூறினார். மேலும் அரிவாளால் தலையில் குத்தியதாக கூறினார். அவரை நான் பரிசோதித்த போது அவர் சுய நினைவுடன் இருந்தார். அவருக்கு இருந்த காயங்கள் 1) முன் தலையின் நடுப்பகுதியில் 1x1 செ.மீ சிராய்ப்பு காயம். 2) முன் தலையில் நீளவாட்டு சிராய்ப்பு காயம் 3x1 செ.மீ அளவில் இருந்தது. 3) இடது பின் பக்க இடுப்பு பகுதியில் 4x4 செ.மீ அளவில் இரத்த கட்டு இருந்தது. அவர் தந்த தகவலின் அடிப்படையில் நான் விபத்து பதிவேடு பதிவு செய்து உள்நோயாளியாக அனுமதித்தேன். அந்த விபத்து பதிவேடு **அ.சா.ஆ-15** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அவர் மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்தியதன் அடிப்படையில் அவருக்கு இருந்த காயம் சாதாரண காயம் என தெரிய வந்தது. இந்நிலையில் அவர் 04.05.2022 ஆம் தேதி மருத்துவமனையில் இருந்து விடுவிக்கப்பட்டார். அவருக்கிருந்த காயம் சாதாரண காயம் என அ.சா.ஆ-15 ன் பின்பகுதியில் குறிப்பிட்டுள்ளேன்.

3. அன்றைய தினம் மாலை 6.15 மணியளவில் அதே ஊரை சேர்ந்த கலியமூர்த்தி மகன் **அ.சா-4 சுபிராஜ்** சிகிச்சைக்கு வந்தார். அவர் தன்னை அதே தினம் 4.30 மணியளவில் வேளாக்குடி கீழத்தெரு மெயின் ரோட்டில் அடையாளம் தெரிந்த 4 நபர்கள் தன்னை அரிவாளால் அடித்ததாகவும். இடது கையில் குத்தியதாகவும் கூறினார். அவருக்கு இருந்த காயங்கள் 1) இடது முழங்கையின் பின்புறத்தில் கிழிந்த காயம் 0.5x0.5 செ.மீ இருந்தது. 2) மேலும் அதே இடத்தில் இரத்த கட்டு 4x4 செ.மீ அளவில் இருந்தது. அவர் தந்த தகவலின் அடிப்படையில் நான் விபத்து பதிவேடு பதிவு செய்து உள்நோயாளியாக அனுமதித்தேன். அந்த விபத்து பதிவேடு **அ.சா.ஆ 16** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அவர் மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்தியதன் அடிப்படையில் அவருக்கு இருந்த காயம் சாதாரண காயம் என தெரிய வந்தது. இந்நிலையில் அவர் 06.05.2022 ஆம் தேதி மருத்துவமனையில் இருந்து

விடுவிக்கப்பட்டார். அவருக்கிருந்த காயம் சாதாரண காயம் என அ.சா.ஆ-16ன் பின்பகுதியில் குறிப்பிட்டுள்ளேன்.

4. மேலும் அன்றைய தினம் மாலை 6.20 மணிக்கு வேளாக்குடி, மேலத்தெருவை சேர்ந்த அ.சா-1 கலியமூர்த்தி மனைவி **அ.சா-3 சுசிலா** சிகிச்சைக்கு வந்தார். அவர் தன்னை மாலை 4.30 மணிக்கு வேளாக்குடி கீழத்தெருவில் அடையாளம் தெரிந்து 3 ஆண் நபர்கள் முடியை பிடித்து சுவரில் அடித்ததாக கூறினார். அவரை நான் பரிசோதித்த போது அவர் சுயநினைவுடன் இருந்தார். வெளிப்புற காயம் எதுவும் இல்லை. வலது பக்க கழுத்தில் வலி இருப்பதாக கூறினார். வயிற்றின் மேல் பகுதியில் வலி இருப்பதாக கூறினார். அவர் தந்த தகவலின் அடிப்படையில் நான் விபத்து பதிவேடு பதிவு செய்து உள்நோயாளியாக அனுமதித்தேன். அந்த விபத்து பதிவேடு **அ.சா.ஆ-17** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அவர் மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்தியதன் அடிப்படையில் அவருக்கு இருந்த காயம் சாதாரண காயம் என தெரிய வந்தது. இந்நிலையில் அவர் 07.05.2022 ஆம் தேதி மருத்துவமனையில் இருந்து விடுவிக்கப்பட்டார். அவருக்கிருந்த காயம் சாதாரண காயம் என அ.சா.ஆ-17ன் பின்பகுதியில் குறிப்பிட்டுள்ளேன்.

5. கடந்த 01.05.2022 ஆம் தேதி மாலை 6.30 மணியளவில் நான் அவசர சிகிச்சை பிரிவில் பணியில் இருந்தபோது வேளாக்குடி மேலத்தெருவை சேர்ந்த கலியன் மகன்அ.சா-2 ராசு என்பவர் சிகிச்சைக்கு வந்தார். அன்று 4.30 மணியளவில் வேளாக்குடி கீழத்தெரு மெயின் ரோட்டில் அடையாளம் தெரிந்த 6 நபர்கள் மூங்கில் கட்டையால் தன்னை அடித்ததாக கூறினார். நான் அவரை பரிசோதித்த போது அவர் சுய நினைவுடன் இருந்தார். வெளிப்புற காயம் எதுவும் இல்லை. தனக்கு மயக்கம் வருவதாக கூறினார். இடுப்பின் பின் பகுதியில் வலி இருப்பதாக கூறினார். அவரை உள்நோயாளியாக அனுமதித்தேன். இது சம்மந்தமாக விபத்து பதிவேடு பதிவு செய்தேன். அந்த விபத்து பதிவேடு அ.சா.ஆ-18 ஆக குறியீடு செய்யப்படுகிறது. 02.05.2022 ஆம் தேதி பின் இடுப்பு முதுகெலும்பு எக்ஸ்ரே எடுக்கப்பட்டது. அதில் எலும்பு முறிவு சிகிச்சை நிபுனர் அவருக்கு எந்தவித எலும்பு முறிவும் இல்லை என்று குறிப்பிட்டுள்ளார். அதன் அடிப்படையில் நான் அவருக்கு காயத்தின் தன்மை சாதாரண காயம் என தெரிய

வந்தது. இந்நிலையில் அவர் 04.05.2022 ஆம் தேதி மருத்துவமனையில் இருந்து விடுவிக்கப்பட்டார். அவருக்கிருந்த காயம் சாதாரண காயம் என அ.சா.ஆ-18 ன் பின்பகுதியில் குறிப்பிட்டுள்ளேன். போலீசாரிடம் இந்த சான்றிதழ்களை நான் வழங்கியுள்ளேன்.

எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:

அ.சா-1 கலியமூர்த்தி என்பவருக்கு இருந்த காயங்கள் இரு சக்கர வாகனத்தில் செல்லும்போது கீழே விழுந்தால் இந்த காயங்கள் ஏற்பட வாய்ப்பு உண்டா என்றால் உண்டு. அ.சா-2 ராசு மற்றும் அ.சா-3 சுசிலா ஆகியோர்கள் வலி இருப்பதாக கூறியுள்ளதை பொறுத்து இரு சக்கர வாகனத்தில் செல்லும் போது கீழே விழுந்தால் மேற்படி வலி ஏற்பட வாய்ப்பு உள்ளதா என்றால் வாய்ப்பு உள்ளது. அ.சா-4 சுபிராஜ் என்பவருக்கு இருந்த காயங்கள் இரு சக்கர வாகனத்தில் செல்லும்போது கீழே விழுந்தால் இந்த காயங்கள் ஏற்பட வாய்ப்பு உண்டா என்றால் உண்டு. இந்த வழக்கு சம்மந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்யவில்லை என்று சொன்னால் ஆமாம்.

சாட்சி சொல்ல சொல்ல என் உத்தரவுப்படி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு பின் சாட்சியிடம் மேற்படி வாக்குமூலம் படித்துக் காண்பித்த போது சாட்சி சரியென்று என் முன்பாக கையொப்பம்செய்தார்.

VADIVEL M

Digitally signed by VADIVEL M
Date: 2025.11.12 17:12:37 +0530

அமர்வு நீதிபதி,
எஸ்.சி /எஸ்.டி (வன்கொடுமை தடுப்பு )
வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு
நீதிமன்றம், திருவாரூர்.